பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

பௌதிகவியல்
A/L - 1990
MECHANICS
[பொறியியல்]
ஆரம்பம்:
23rd April
SUN 7.00 a.m.)
By
திரு. சோதிலிங்கம்
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்,
இருபாலே.

# உதயன்

விலை ரூ2/50

O/L 1989
DAY CLASS
திங்கள் - வெள்ளி
காலை 8.00 - பி.ப. 1.00
ஆரம்பமாகிவிட்டது
இடத்திற்கு முந்துங்கள்
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்,
இருபாலை

சுடர்: 4 சுக்கில ஆடு சித்திரை மீ 07 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 13 (20-04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-114

பூர்வாங்கக் கலந்துரையாடலுக்கு

# ஜே. வி. பியையும் பிரதிநிதியை நியமிக்க பிரேமா அழைப்பு

## அரசின் நல்லெண்ணத்தை புரிந்து கொள்ள வாய்ப்பு உண்டாம்

கொழும்பு, ஏப்ரல் 20

**அரசாங்கத்துடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு முன்னோடியாக, பூர்வாங்கக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்கு பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு, ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச, ஜே வி. பியினருக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.**

பூர்வாங்கக் கலந்துரையாடலை நடத்துவதன்மூலம், அரசு சமாதானத்தைக் கொண்டு வர எவ்வளவு இதயசுத்தியுடன் நடந்துகொள்கிறது என்பதையும், அரசின் நல்லெண்ணத்தையும் ஜே. வி. பியினர் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

வெளியுறவு அமைச்சரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன, நேற்று விடுத்த அறிக்கையில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பிரஸ்தாப அறிக்கை விபரம் வருமாறு.-

அரசாங்கம் சமாதானத்தையும் வன்செயல்கள் அற்ற அமைதியான சூழ்நிலையையும் உருவாக்குவதில் உண்மையிலேயே அக்கறை கொண்டிருக்கிறதா? என்பதைத் தெரிந்து கொள்ள ஒருவேளை ஜே. வி. பியினருக்கு (மக்கள் விடுதலை முன்னணியினருக்கு) விருப்பம் இருக்கலாம். அந்தப் பட்சத்தில் அவர்கள் பூர்வாங்கப் பேச்சுக்களுக்கு ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்து அனுப்புவதன் மூலம் அரசின் நல்லெண்ணத்தைப் புரிந்துகொள்ளலாம் என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

### மதிப்பிட முடியும்

அரசுடனான இந்தப் பூர்வாங்கப் பேச்சுக்களின்போது அரசாங்கம் எடுக்கக்கூடிய செயல்களை எடைபோட்டு பார்த்து, ஜே. வி. பி.யினர் தாம் நேரடியாக அரசுடன் உத்தியோக பேச்சுவார்த்தைகளை நடத்துவதன்மூலம் நாட்டில் மீண்டும் சமாதானத்தையும் சட்டம் - ஒழுங்கையும் நிலைநாட்ட முடியும்? என்பதை மதிப்பிட்டுப் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

அரசு உண்மையிலேயே இத்தகைய பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைச் சமா

(6 ஆம் பக்கம் பார்க்க)

---

ஆளிபொருள் விலை அதிகரித்ததால்

## பஸ் கட்டணம் உயராது; தனியாருக்கும் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்ரல்20

பஸ் கட்டணத்தை அதிகரிக்கப்போவது இல்லை என்று போக்குவரத்து அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுபோன்று தனியார் பஸ் உரிமையாளர்களும் பஸ் கட்டண அதிகரிப்பில் ஈடுபடக் கூடாது என்று தனியார் பஸ் திணைக்களப் பணிப்பாளர் திரு. எம். ஏ. எச். டபிள்யு. மெண்டிஸ் நேற்று எச்சரித்தார்.

எரிபொருள் கட்டண உயர்வைப் பயன்படுத்தி, தனியார் பஸ் உரிமையாளர்கள் பஸ் கட்டணங்களைச் சில பகுதிகளில் அதிகரித்துள்ளதாக வெளியான செய்திகளைத் தொடர்ந்தே முன்கண்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

(ஒ எ)

---

விடுதலைப் புலிகளின் பிரதிநிதி

## பாலசிங்கத்தின் வசதிகளை இலங்கை அரசு கவனிக்கும்

கொழும்பு, ஏப்ரல்20

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதியாக வரும் திரு. அன்ரன் பாலசிங்கம் கொழும்பில் தங்கும்போது அவரது பாதுகாப்பு, மற்றும் தங்குமிட வசதிகளை இலங்கை அரசே செய்து கொடுக்கவிருக்கிறது.

கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் அவர் தங்கியிருப்பார்.

இலங்கை அரசின் பிரதிநிதியாக ஜனாதிபதியின் செயலாளர் திரு. கே. எச். ஜே. விஜேதாஸ பூர்வாங்கப் பேச்சுக்களை திரு. அன்ரன் பாலசிங்கத்துடன் நடத்துவார்.

பேச்சுவார்த்தைக்குரிய பூர்வாங்க ஏற்பாடுகளையும் நிகழ்ச்சி நிரல்களையும் தயாரிப்பதாக ஆரம்பப் பேச்சுக்கள் அமையும் என்று தெரிகிறது.

(ஒ-எ)

---

## இலங்கை அரசே மக்கள் தொண்டர் படைக்கு ஆயுதங்களை வழங்குகிறது

கொழும்பு, ஏப் 20

வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் தொண்டர் படைக்கு இலங்கை அரசாங்கமே ஆயுதங்களை வழங்கியிருக்கிறது.

முதலாவது தொகுதி ஆயுதங்களாக சீனத் தயாரிப்பான எஸ். 84 ரக தன்னியக்கத் துப்பாக்கிகள் 450 மற்றும் 90 ஆயிரம் ரவைகள் மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

விமானம் மூலம் கொழும்பில் இருந்து எடுத்துச்செல்லப்பட்ட இவை, இப்போது மட்டக்களப்புப் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது தொகுதி ஆயுதங்கள் வருகிற சனிக்கிழமை அளவில் அனுப்பி வைக்கப்படும்என்றுதகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கே இலங்கை அரசு ஆயுதங்களை வழங்கியிருக்கிறது என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. ஒ-எ)

---

தேர்தல் கடமையில் ஈடுபட்ட

## கல்வித் திணைக்களத்தை சேர்ந்தோருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப். 20

கடந்த பொதுத் தேர்தலில் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் யாழ். கல்வித் திணைக்களத்தினுல் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் சனி ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ். கல்வித் திணைக்களத்தில் வைத்துக் காசோலைகளாக இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன.

பொதுத் தேர்தலில் கடமையாற்றிய கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அனைவரும் பிரஸ்தாப தினங்களில் தமது கொடுப்பனவைத் திணைக்களத்துக்கு வந்து பெற்றுக் கொள்ளலாம் எனக் கணக்காளர் அறிவித்துள்ளார்.

[ஒ-9]

---

உதயன் வெளியீட்டகத்திலிருந்து
புதிய இந்து மத மாத மஞ்சரி

★ ஞானக்கதிர் ★

நாளை வெள்ளிக்கிழமை
வெளிவருகிறது

★ இளையோர், முதியோர், ஆண்கள், பெண்கள் அனைவர் இதயங்களிலும் ஆன்மீகச் சிந்தனையை வளர்க்கவும் —
★ ஞானக் கருத்துக்களைப் பரப்பி இந்து சமய வளர்ச்சிக்கு உதவவும் —

★ ஞானக்கதிர் ★

தலைசிறந்த சமய எழுத்தாளர்களின் ஆழமான ஆன்மீகக் கருத்தோவியங்களுடன் முதலாவது இதழ் வெளிவருகிறது.

உங்கள் பிரதிக்கு உதயன் முகவர்களிடம் இன்றே பதிவுசெய்து கொள்ளுங்கள்!

---

## அடகு நகை மீளளிப்பு அடுத்த மாத முற்பகுதியில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

மக்கள் வங்கிக் கிளைகள் ஐந்தில், அடகு நகைகள் மீள அளிக்கப்பட உள்ளன.

அடுத்த மாத முற்பகுதியில் நகைகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கன்னாதிட்டி, ஸ்ரான்லி றேட், பிரதான வீதி, நவீன சந்தை, சுன்னாகம் ஆகிய மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்தோரின் நகைகளே மீளளிக்கப்பட உள்ளன.

மீளளிக்கப்பட உள்ள நகைகளைக் கொழும்பிலிருந்து எடுத்துவர அதிகாரிகள் குழு ஒன்று கடந்த திங்கட்கிழமை கொழும்பு செல்ல ருந்தது. ஆனால் தென்பகுதியில் இடம் பெற்ற அசம்பாவிதங்களினால் அந்தக் குழு தனது பயணத்தை ஒத்தி வைத்துள்ளது

இந்தக் குழு இம்மாதம் 24 ஆம் திகதி கொழும்பு சென்று அடகுநகைகளை இங்கு எடுத்து வந்து விநியோகத்தை மேற்கொள்ள உள்ளதாக வங்கி வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. [அ-9]

---

சுபநேரம்
20 - 04 - 1989
வியாழக்கிழமை
சித்திரை - 07

சுபநேரம்;
07.32 முதல் 09.02 வரை
ராகுகாலம்:
01.32 முதல் 03.02 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

---

### புதிய தூதுவர் திங்கள் பதவியேற்பு

கொழும்பு, ஏப்ரல்20

இந்தியாவின் புதிய தூதர் திரு. லவன் மெஹ்ரோத்தா வருகிற 24-ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பில் பதவி ஏற்பார்.

அன்று அவர் ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்து நியமனப் பத்திரத்தைக் கையளிப்பார்.

வருகிற சனிக்கிழமை திரு. மெஹ்றோத்ரா கொழும்பு வந்து சேர்வார்.

இவர் தற்சமயம் யூகோஸ்லேவியாவில் இந்தியத் தூதுவராகப் பணிபுரிந்துவருகிறார்.

(ஒ-எ)

---

## கொழும்புகுண்டுவெடிப்பில் இறந்தவர் யாழ். இளைஞர்

கொழும்பு, ஏப்ரல் 20

கொழும்பு நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களின்போது உயிரிழந்தவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 20 வயதான சிவநாதன் ஆறுமுகம் என்று அடையாளம் காணப்பட்டது.

வெள்ளவத்தை வர்த்தக வங்கிக் கிளைக்கு அருகில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் இவரும் ஒருவர்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இவர் மரணமானர்.

இதேவேளை குண்டு வீசியவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இரண்டு நபர்களை விமானப்படை வீரர்கள் மடக்கிப் பிடித்து கொம்பனித் தெரு பொலீஸாரிடம் ஒப்படைத்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

[ஒ-எ]

---

## தமிழ்ப் பகுதி எம். பிக்களுடன் பிரேமா 28இல் கலந்துரையாடல்

வடக்கு - கிழக்கு மாகாண எம். பிக்களுடன் ஜனாதிபதி பிரேமதாச நடத்தும் கலந்துரையாடல் வருகிற 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

மட்டக்களப்பு, திகாமடுல்ல, திருகோணமலை, வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து தேர்தல் மாவட்டங்களையும் சேர்ந்த எம், பிக்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட வளர்ச்சிப் பணிகளுக்கு ஒவ்வொரு எம். பிக்கும் ஒதுக்கப்பட்ட 25 இலட்சம் ரூபாவைப் பயன்படுத்துவது பற்றி இக்கலந்துரையாடலின்போது ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

---

### மின்சாரத்துக்கு சிறுவன் பலி

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று தண்ணீர் இறைத்த போது மின்சாரம் தாக்கி சிறுவன் ஒருவன் மரணமான சம்பவம் கடந்த திங்கட்கிழமை முரசுமோட்டையில் இடம் பெற்றது.

முரசுமோட்டை இரண்டாம் கட்டையைச் சேர்ந்த நடராசா குமார் [வயது 13] என்னும் சிறுவனே பலியானவராவார். (ஒ-117)

---

### நேற்று மழை

நீண்டகால இடைவேளையின் பின்னர் யாழ்ப்பாண நகரம் உட்பட குடாநாட்டின் சில பகுதிகளில் நேற்று மாலையிலும் இரவிலும் சுமாரான மழை பெய்தது. [அ-9]

---

## தொலைபேசி எச்சரிக்கையை அடுத்து பலத்த பாதுகாப்பு

### மாகாண சபைச் செயலகத்திற்கு

திருகோணமலை, ஏப்ரல் 20

வட—கிழக்கு மாகாணச் சபைச்செயலகத்திற்கு குண்டு வைக்கப்படும் என்று அனுமதேய தொலைபேசி எச்சரிக்கை ஒன்று கிடைக்கப்பெற்றதால் கடந்த திங்கட்கிழமை முதல் அங்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இரண்டு பெரிய நுழைவாயில்களும் மூடப்பட்டுள்ளன.

எனினும் அமைச்சர்களின் வாகனங்கள் மாத்திரம் ஒரு நுழைவாயிலால் உள்ளே செல்லவும் வெளியே வரவும் அனுமதிக்கப்படுகிறது. ஏனையோர் ஒற்றைக்கதவு வாயிலையே உபயோகிக்க முடியும்.

அனைவரும் பலத்த சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர். வெளிவீதியில் அமைதிப் படையினர் வாகனங்களையும் பாதசாரிகளையும் தீவிர சோதனைக்கு உட்படுத்துகின்றனர். (ஒ 150)

---

## தீவிரவாதிகள் மீது தாக்குதல் வேண்டாம்

### படையினருக்கு பிரேமா உத்தரவு

தென்னிலங்கைத் தீவிரவாதிகள் மீது இராணுவ நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச நேற்று ஆயுதப் படையினருக்கு உத்தரவிட்டார்.

தீவிரவாதிகள் தொடர்ந்து சரணடைவதற்கு வசதியாக ஜனாதிபதி இந்த உத்தரவை விடுத்திருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை பாதுகாப்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)

---

முச்சந்தி முரளி



தாக்குதல் நடத்துற விஷயத்திலை உவர் பிரேமர் மெத்த நோகாமல் தான் நடந்து வாறூர் எண்டு சொல்லுங்கோ......!

---

### பாலசிங்கம் இன்று கொழும்பு வரலாம்

திரு. அன்டன் பாலசிங்கம் இன்று வியாழன் கொழும்பு வந்து சேருவார் என்று வவுனியாவில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன என்று கொழும்புப் பத்திரிகை "த ஐலண்ட்" செய்தி வெளியிட்டது. (ஒ-எ)

---

மங்களகரமான திறப்புவிழா

அன்புடையீர்!

நிகழும் சுக்கில ஆண்டு 21 - 04 - 89 வெள்ளிக்கிழமை காலை 8.24 முதல் 9.00 மணி வரையுள்ள சுப நேரத்தில்,

VIDEO VIMEL

"வீடியோ விமல்" என்னும் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்படுகிறது. வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

--உஷா சினிமா.

தரமான தமிழ், ஆங்கில வீடியோ படங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவும், தரமான முறையில் பதிவு செய்யவும்

"வீடியோ விமல்"
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி [மேல்மாடி],
யாழ்ப்பாணம். (10630)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், கடை விருக்கிகள், அலுமாரிகள், Fan, Cot, T.V., Type-writer, Voltage Regulator, bicycle மற்றும் பல விற்பனைக்கு உண்டு. 343, பருத்தித்துறை ரோட், அரசடி சந்தி, நல்லூர். [10624]

### காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அண்மையில் பிரதான வீதியிலிருந்து 50 யார் தூரத்தில் வீடுகட்டுவதற்கு ஏற்ற நிலம் பரப்பு ஐந்து விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 620 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் ஓட்டுமடம் சந்திக்கு அண்மையில். (203)

### அச்சகம் விற்பனைக்கு

உன்னதமான நிலையிலுள்ள ஒட்லி சிலிண்டர் அச்சியந்திரம், புத்தம் புதிய எழுத்துக்கள், கேஸ்கள் மற்றும் அச்சக உபகரணங்கள் புதியவை. உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும்: முகாமையாளர், மலரகம், ஏழாலை வடக்கு, ஏழாலை. [183]

### விற்பனை

4 அங்குலக் கன கொங்கிறீற் கற்கள் விற்பனைக்கு உண்டு, 5, 3 அங்குலக் கன கற்களுக்கும் ஓடர் ஏற்கப்படும். ஆனந் பண்ணை, மயிலிட்டி வடக்கு. (153)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமாயின ஒருநாள் லோமன் புறொயிலர்க் குஞ்சுகள், லோமன் வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 29-4-1989 இல் விநியோகிக்கப்படும். 25-4-89க்கு முன் பதிவு செய்க. குஞ்சுகள் எடுப்பவர்களுக்கு மருந்துகள் இலவசமாக வழங்கப்படும். திருமகள் ஸ்ரோஸ் K. K. S. றோட், லக்கிபாம் சென்ரர், திருநெல்வேலி சந்தி. C. S. K. ரேட் சென்ரர் 81 கச்சேரி, நல்லூர் றோட், (197)

### போட்டோஸ்ரற்

காலை முதல் மாலை வரை மிகவும் தெளிவாகவும் விரைவாகவும் போட்டோஸ்ரற் பிரதிகள் எடுக்கப்படும். கூடுதல் பிரதிகளுக்கு கழிவு உண்டு. நாடுவோர் மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரிவீதி, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். ( /2292)

### ஆங்கலப் புத்தகம்

ஆரம்பமுதல் G. C. E. (O/L) வரை இலக்கணம், அப்பியாசம், பேச்சுப் பயிற்சி முதலியவற்றை உள்ளடக்கிய புதுமையான முறையில் T. Rajalingamஎன்பவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலபுத்தகம் தான் Basic Grammar and Spoken Practical கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (10620)

### எமது சேவையில்

கலர் பிலிம் சுருள்கள் கொம்பியூட்டரில் Processing & Print பிரதி ஒன்று 4/75 மட்டுமே. அத்துடன் இலவசமாக அல்பம் [Album] குயிக் ஸ்ரார் [மனோகரா சந்திக் கண்மையில்] 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [10626]

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### கோழிக்குஞ்சு விநியோகம்

(Cobb) இன புரொயிலர் குஞ்சு 25-04-1989) செவ்வாய்க்கிழமை சகாய விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். [புகையிரத நிலையத்திற்கு அண்மையில்] (10580)

## யோகப் பயிற்சி நிலைய ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 20

யாழ்ப்பாண யோகப்பயிற்சி நிலையத்தின் ஆரம்ப வைபவம் நாளை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தொழிலதிபர் திரு. க. கனகராசா கலந்து கொள்ளும் இந்த வைபவத்தில் மேற்படி நிலைய அதிபர் திரு. வ. சண்முகம், யாழ் வர்த்தக சங்கத் தலைவர் திரு. ஆ.க. நடராசா ஆகியோர் உரையாற்றுவார்கள் (க)

## லியோ கழக செய்தித் தாள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

யாழ் மத்திய கல்லூரி லியோ கழகம் வெளியிடும் லியோ செய்தித் தாளின் வெளியீடு 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும். (க)

## நாச்சிமார் கோவில் தீர்த்தத்திருவிழா

குருநகர், ஏப். 20

யாழ். வண்ணைஸ்ரீ காமாட்சி அம்பாள் நாச்சிமார் கோவில் ரதோற்சவம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு வெகு சிறப்பாக நடைபெற்றது.

பகல் 12 மணிக்கு அன்னதான வைபவத்தை அடுத்து மாலை 3.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன், பச்சை சாத்தி அம்பிகை ஆலயத்திற்கு எழுந்தருளிய காட்சி ரம்மியமாக அமைந்தது.

இன்று [20- 4- 89] காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறும். [க-51]

## புங்குடுதீவு அம்மன் ஆலய தீர்த்தத்திருவிழா

குருநகர். ஏப். 20

புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் கண்ணகை அம்மன் ஆலயத் தேர்த் திருவிழா நேற்றுக்காலை [19-4 89] விமரிசையாக நடைபெற்றது.

மாலை 3.00 மணிக்கு பச்சை சாத்தலும், விசேஷ அபிஷேக ஆராதனையைத் தொடர்ந்து அம்பாள் தேரிலிருந்து ஆலயத்திற்கு எழுந்தருளினர்.

இன்று 20-4-89 காலை சமுத்திர தீர்த்த உற்சவம் நடைபெறும். (க-51)

## சித்திரா பூரணை விழா

யாழ்ப்பாணம், ஏப். 20

நாவற்குழி அறிவொளி மன்றம் சித்திரா பூரணை விழாவை இன்று வியாழக்கிழமை கொண்டாடுகின்றது.

நாவற்குழி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும் இந்த விழாவில், காலையில் அறிவியற் போட்டிகள் நடைபெறும் மாலையில் சிறப்புரைகளும், பரிசில் வழங்கலும் இடம்பெறும். (க)

## அம்பாள் ஆலய கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப் 20

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் சம்பு ராக்ஷண கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறும். (க)

## ஏழாலை மகா வித்தியாலய இல்லப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

ஏழாலை மகாவித்தியாலய வருடாந்த இல்லப்போட்டியில் நீல இல்லம் சாம்பியனாகியது.

மஞ்சள், சிவப்பு இல்லங்கள் இரண்டாம் மூன்றும் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

ஆங்கிலக் கல்வி அதிகாரி திரு. தியாகராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசில்களை பாடசாலையின் உப அதிபர் வழங்கினர். (ச)

## எமது புதிய வெளியீடுகள்!

(1) பாக்கியராஜ், மீனாட்சிசேஷாத்ரி
என் ரத்தத்தின் ரத்தமே

(2) முரளி, சரோஜாதேவி
தர்மதேவன்
(ஒறிஜினல்)

(3) சீர்காழி கோவிந்தராஜனின்
அகத்தியர்
(ஒறிஜினல்)

(4) எம். ஜி. ஆரின்
காலத்தை வென்றவன்

குணம் வீடியோ சென்ரர்,
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23665 [சி/2307]

## ஆறும் மாத நினைவஞ்சலியும்
### அந்தியேட்டி அழைப்பும்

தாயின் மடியில்:
18- 12- 1969

தாயக மண்ணில்:
22- 11- 1988



**சுகுமார் (துர்க்கா, பரிதா)**

கல்வியிலே கலை மகனாய்
விளையாட்டிலே வித்தகனாய்
மண் மீட்கும் பணியில்
மனம் தளரா இலட்சியனாய்
வீட்டினிலே தலைவனாய்
வீறு கொண்ட மகனாய்
ஊர் போற்றும் உத்தமனாய்
பெற்றவள், உடன்பிறப்புகள்
மனதில் நிறைந்தவனாய்
மோகத் தமிழில் தாகம் கொண்டு
வேகமாய் உயிரைப் போக்கிய
தியாகியின் ஆத்மா சாந்தி கொண்டிடவே
மண் மீட்கும் சக்தியாய் மாறுவோம்.

அப்பா, அம்மா, அக்காமார், அண்ணர்மார்,
தம்பிமார், தங்கைமார், மைத்துனர்.

நாவற்குளிச்சந்தி,
நாவற்குளி. (206)

## ஓராண்டு நினைவு அஞ்சலி

அன்னையின் மடியில்:
9. 4. 1933

ஆண்டவன் அடியில்
20 4. 1988

திதி 20. 4. 1989



**அமரர் அரியரத்தினம் ராமச்சந்திரன்**

எங்கள் குலவிளக்கே! மங்காத மணிவிளக்கே!
தங்கள் நினைவெங்கள் மனதைவிட்டு நீங்கவில்லை
பொங்கிவரும் வேளையிலே குடம் உடைந்து
போனதையா!
தங்கித் தவமிருந்து பெற்றெடுத்த பிள்ளைகளும்,
பாங்காகத் தாலிகட்டி மாலையிட்ட மனையாளும்,
வரமிருந்து பெற்றெடுத்து கலி தீர்த்த அம்மாவும்,
உடன் பிறந்த சோதரரும் உற்றார் உறவினரும்,
ஏங்கித் தவித்திடவே எமை விட்டுப் போனீரே!
உமதாவி சாந்தி பெற வாழ்த்துகின்றோம்
வாழ்த்துகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தங்கள் பிரிவாற்றுது துயருறும்
**மனைவி, மக்கள், தாயார், உடன்பிறந்தோர், உற்றார், உறவினர்.**

பொற்பதி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (159)

## காணமற்போனோர் பற்றிய தகவல் கோருகிறார் சுவீடன் வாசி

யாழ்ப்பாணம், ஏப். 20

இலங்கையில் ஆட்கள் காணமல் போனதை ஒட்டி சர்வதேச மன்னிப்புச் சபை பெரும் கவலையைத் தெரிவித்திருக்கிறது. இவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய இந்த ஸ்தாபனம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

1983 நடுப்பகுதியில் இருந்து 1987 நடுப்பகுதி வரை 683 பேர் காணமற் போயுள்ளதாகவும் இவர்களில் 6 பேர் பற்றிய தகவல் மட்டுமே கிடைத்திருப்பதாகவும் சர்வதேச மன்னிப்புச்சபை அறிய வந்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபை இது பற்றி இலங்கை அரசாங்கத்திடம் பிரஸ்தாபித்து காணமல் போனவர்கள் பற்றிய தகவல்களை அறிந்து வெளிப்படுத்த முயற்சி எடுக்கும்படி கோரியுள்ளது.

சுவீடனிலுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை வேலைக் குழுவின் ஓர் உறுப்பினரான வில்லி ஹேர்மான்சன் என்ற பொறியியலாளர் காணமல் போனவர்கள் விவகாரத்தில் அக்கறை கொண்டு அவர்கள் பற்றிய விவரங்களைத் தனக்குத் தருமாறு வேண்டியுள்ளார்.

அவருடைய முகவரி:
Willy Hermansson
Hakantorpsgatan- 49,
72476 Vasteras,
SWEDEN. (க)



# ★ Patrician Institutes ★
## தொழினுட்ப பயிற்சி நெறிகள்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

★ **Computer Programming in d Base III+ and d Base IV**
(3 மாத கால பயிற்சி நெறி)

ஆரம்பம்: 22-04-89 சனிக்கிழமை
(வார இறுதி வகுப்புகள்)

மேற்படி இரு பயிற்சி நெறிகளுக்கும் விண்ணப்பிப்போரில் எமது நிறுவனத்தில் பயின்ற மாணவ மாணவியருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

★ **Computer Programming and Data Processing in Basic Language**
(6 மாத கால பயிற்சி நெறி)

15-04-89 சனிக்கிழமை ஆரம்பமாகி விட்டது.
மாலை 1. 00 மணி (வார இறுதி வகுப்புகள்)
(ஒரு பிரிவில் 15 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர்)

Practicals on: LASER 386/T, 286, XT, AT, (IBM Compatible)
APPLE II, and Commodore Computers
Lectures and Practicals in A. C. Room.

Lectures By: MR. SUNDRARAJAH B. Sc. Eng. (U. K.) M. C. S.
MR. K. K. VIMALARAJAH Dip in Comp. (U. K.)

பின்வரும் பயிற்சி நெறிகள்

17-04-1989 திங்கட்கிழமை
★ காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிவிட்டது ★

★ மின் ஒட்டு வேலை - Arc Welding
(3 மாத கால பயிற்சி நெறி)

★ மோட்டார் மெக்கானிசம் - Motor Mechanism
(6 மாத கால பயிற்சி நெறி)

★ கடைச்சல் இயந்திர இயக்கம் - Lathe Operation
(3 மாத கால பயிற்சி நெறி)

★ மோட்டார் வைண்டிங் - Motor Winding
(4 மாத கால பயிற்சி நெறி)

★ எலக்ரிக்கல் வயரிங் - Electrical Wiring
(3 மாத கால பயிற்சி நெறி)

★ இயந்திர மரவேலைப் பயிற்சி - Mechanised Wood Work
(3 மாத கால பயிற்சி நெறி)

இம் மரவேலைப் பயிற்சி நெறி அகில உலக கெயார் நிறுவனத்தின் (Care International) உதவியுடன் இலவசமாகப் பயிற்றுவிக்கப்படுகிறது. அத்துடன் ஊக்குவிப்புப் பணமாக நாளொன்றுக்கு 15/- ரூபாவும் வழங்கப்படும். புதிய பிரிவு 17 - 04 - 1989 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிவிட்டது. பயில விரும்புவோர் உடன் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்து கொள்ளவும்.

அத்துடன் மின்சார உபகரணங்களும் நீர் இறைக்கும் இயந்திர மோட்டார்களும் வேறுவகையான மோட்டார்களும் அனுபவம் வாய்ந்த நிபுணர்களால் குறைந்த செலவில் விரைவில் திருத்தி அமைத்துக் கொடுக்கப்படும்.

★ கட்டணங்கள் தவணை அடிப்படையில் செலுத்தலாம்.
★ விண்ணப்பப் படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
★ மட்டுப்படுத்தப்பட்ட அளவு மாணவரே சேர்த்துக் கொள்ளப்படுவர்.
★ கலவரங்களால் பாதிக்கப்பட்ட அல்லது முழுக்கட்டணமும் செலுத்த இயலாதவர்களுக்கு பங்குக் குருவானவரின் சிபார்சின் பேரில் Hudec (மனித முன்னேற்ற நடுநிலையம்) ஊடாக அவர்களுக்கு அரைக்கட்டண வசதி செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு
Registrar,
**PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES**
**59, St. Patrick's Road, JAFFNA.**

### வாகன லைசென்ஸ் புதுப்பித்தலுக்கான அத்தாட்சிப்பத்திரங்கள்
**Fittness Certificate for Motor Vehicle – 1989**

1989 ஆம் ஆண்டிற்கான மோட்டார் வாகன லைசென்ஸ் புதுப்பித்தலுக்கான அத்தாட்சிப் பத்திரங்கள் திரு. A. S. குணசீலன் (Automobile Engineer) அவர்களால் தொடர்ந்து எமது ஸ்தாபனத்தில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை எமது வாடிக்கையாளருக்கு மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

(கட்டணம் ரூபா 200/- மட்டுமே)

Registrar
Patrician Industrial Institute
59, St. Patrick's Road, JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கக் கடத்தல் முறியடிப்பு

கொழும்பு, ஏப்ரல் 20

14 1/2 கிலோ எடையுள்ள தங்க பிஸ்கட்டுகளைக் கடத்த எத்தனித்த இரண்டுபேரை மாதம்பைப் பொலீஸார் கடந்த சனிக்கிழமை கைதுசெய்தனர்.

இரண்டு சந்தேக நபர்களின் இடுப்பிலும் தங்கக்கட்டிகள் மறைத்துக் கட்டியிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

அவற்றின் பெறுமதி 65 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டது. (ஓ-எ)

## மட்டக்களப்பில்
# நான்கு வருடகாலத்துக்குப் பின் நெல் கொள்வனவு ஆரம்பமானது

மட்டக்களப்பு, ஏப்ரல் 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் நான்கு வருடகால இடைவெளியின் பின்பு நெல் சந்தைப்படுத்தும் சபையினால் நெல் கொள்வனவு செய்யப்படுகிறது.

விவசாயிகள் நெல்லை நேரடியாக அல்லது முகவர் மூலம் அரிசி ஆலைக் களஞ்சியத்தில் அல்லது ஏறுவூர் களஞ்சியத்தில் ஒப்படைத்து உடனடியாகப் பணம் பெற்று வருகின்றனர்.

நேரடியாகக் கையளிக்கும்போது ஒரு கிலோ 3 ரூபா 93 சதத்துக்கும்—

கூட்டுறவுச் சங்கம் அல்லது கமநல சேவைத் திணைக்களத்தின் மூலம் கையளிக்கும்போது ஒரு கிலோ 3 ரூபா 83 சதத்துக்கும் கொள்வனவு செய்யப்படுகிறது. [க-21]

## அந்தத்தடை நீங்கியது

மட்டக்களப்பு ஏப்ரல் 20

மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்றில் இந்தியப் படையினர் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது.

படையினருக்கு பொருள்களை அதிகவிலையில் விற்பனை செய்தார் என்ற காரணத்துக்காகவே இத்தடை விதிக்கப்பட்டதாக இணைப்பதிகாரி பிரிகேடியர் ஐ. எம். தார் தெரிவித்திருந்தார்.

காத்தான்குடி முஸ்லிம் பிரமுகர்கள் இணைப்பதிகாரியுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையை அடுத்து தடை உத்தரவு நீக்கப்பட்டுள்ளது. [இ - 21]

## கறவைப் பசுக்களை தரும்படி கோரிக்கை

கடந்த கால அசம்பாவிதங்களின் போது கோப்பாய் பகுதியிலுள்ள கறவை மாடுகள் பல இறந்துபோய் விட்டன.

இதனால் இப்பகுதியில் பால் கிடைப்பதே மிக அரிதாக உள்ளது.

நல்ல இனக் கறவைப் பசுக்களை தந்துதவுமாறு விவசாயத் திணைக்களத்தை கோப்பாய் பகுதி விவசாயிகள் வேண்டியுள்ளனர். (ச-72)

## அண்ணாமலை நினைவு மலர்

வடபகுதி நவலங்கா சமசமாசக் கட்சித் தலைவர் காலஞ்சென்ற ஏ. கே. அண்ணாமலையின் நினைவாக மலர் ஒன்றை வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.


## வெற்றிடங்கள்

கண்ணாடித் தொழிற்சாலைக்கு பபிளராக (BUBBLER) பயிற்சி பெறுவதற்கு 16 வயதிற்கும் 20 வயதிற்குமிடைப்பட்ட ஆண்கள் தேவை. பயிற்சிக் காலத்தில் நாளொன்றிற்கு ரூபா 20/- வழங்கப்படும்.

பயிற்சிக்காக குறிக்கப்பட்ட தொகை, ஆட்களே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

உடன் நேரில் வரவும்.

**சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்**
**நீர்வேலி,**

[193]


# உதவி கேட்டு வருவோருக்கு மனம் விரும்பிச் சேவை ஆற்றுக
## அப்போதே மக்கள் மத்தியில் மதிப்பு ஏற்படும்

யாழ்ப்பாணம், ஏப்ரல், 20

பலனை எதிர்பார்க்காமல் கடமையை செய்பவர்களுக்கு அவர்கள் எதிர்பாராத வேளையில் உயர்வு கிடைக்குமென பகவத் கீதையில் கூறப்பட்டுள்ளது. ஓடி உழைப்பவனுக்கு பதவிகள் தேடிவரும். உதவி கேட்டு வருவோருக்கு மனம் விரும்பி சேவையாற்ற வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் மத்தியில் மதிப்பு ஏற்படும்.

சாவகச்சேரி நகரசபையில் செயலாளராகக் கடமையாற்றி யாழ் மாநகரசபை ஆணையாளராக பதவியுயர்வு பெற்றுச் செல்லும் திரு. த. நவரத்தினராசா நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்த பிரிவுபசார விழாவில்உரையாற்றியபோது மேற்கண்டவாறு கூறினார்.

விழாவுக்கு தலைமை வகித்த நகரசபை நிர்வாக உத்தியோகத்தர் அ. சு. ஏனுதிநாதன் தமது தலைமையுரையில் திரு. நவரத்தினராசாவின் சிறந்த நிர்வாகத் திறமையைப் பாராட்டினார்.

திரு. வை. விஜயபாஸ்கரன், திரு.க.சந்திரமௌலீசன் திருமதி கௌ. சோதிநாதன், திரு வ. சிவபாலசுந்தரம், திரு. எஸ். தங்கவேலு, திரு எஸ்சுப்பையா, திரு.பெ. சதாசிவம் உட்பட பலர் உரையாற்றினர் சங்கச் செயலாளர் திரு.சு. சந்திரசேகரன் நன்றியுரை கூறினார். (சு- 117)




குதூகல திறப்பு விழா

# ★ லீலா பான்ஸி பலஸ் ★

காலம்: 20 - 04 - 1989
நேரம்: காலை 7.30 — 9.30 வியாழக்கிழமை

★ பரிசுப் பொருட்கள் ★ பாடசாலை உபகரணங்கள்
★ விளையாட்டுப் பொருட்கள் ★ வெள்ளிப் பாத்திரங்கள்
★ வாசனை அலங்காரப் பொருட்கள் ★ நவநாகரிக மங்கையர் விரும்பும் சகல விதமான பொருட்களையும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**Lella Fancy Palace**
105 A, K. K. S Road, CHUNNAKAM.
[பழைய பொலீஸ் நிலையம் அருகாமையில்]

[சி-2216]


# தையல் பயிற்சியைப் பெற்று பொருளாதாரத்தை அதிகரிக்கலாம்
## தையல் வகுப்பு அங்குரார்ப்பணத்தில் உரை

பச்சிலைப்பள்ளி, ஏப்ரல் 20

தொழில் பயிற்சிகள் இதுவரை தொழில் திணைக்களத்தினாலேயே நடத்தப்பட்டு வந்தது.

தொண்டர் நிறுவனம் இத் தையல் பயிற்சி வகுப்பை இப்பகுதியில் நடத்த முன்வந்திருப்பது வரவேற்கக் கூடிய தொன்றாகும்.

இங்கு பயிற்சிபெறும் இளம் யுவதிகள் தமது பயிற்சியை திறம்படப் பயின்று தமது பொருளாதாரத்தை அதிகரிக்கச் செய்வதுடன் தாம் பெற்ற அறிவை ஏனையோரும் பயன்படுத்தக் கூடிய வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

கிளிநொச்சி மாவட்ட ஹொர்டெக் நிறுவனத்தால் முகமாலை இந்திராபுரத்தில் ஆரம்பிக்கப்பட்ட தையல் பயிற்சி வகுப்பைத் தொடக்கி வைத்த இந்திராபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. கி. கனகசபை மேற்கண்டவாறு கூறினார்.

இந்திராபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி பா. இராமநாதனின் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஆசிரியர் கா. வேலாயுதம்பிள்ளை, ஹொர்டெக் நிறுவன சமூக அபிவிருத்தி அலுவலர் திரு. க. சற்குணநேசன், திரு. பா. ஜோர்ஜ் உட்பட பலர் உரையாற்றினர். [ச-117]

## இறுதிப் பரீட்சை

சுன்னாகம் ஏப்ரல் 20

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் நடைபெற்றுவரும் 1988 1989 ஆம் ஆண்டுக்கான முறைசாராக் கல்விப் பிரிவால் நடத்தப்பட்டு வந்த மோட்டார் பொறித் தொழில் பயிற்சி வகுப்பின் இறுதிப் பரீட்சை 20 ஆம் 22 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. மேற்படி பயிற்சியின் அறிமுறைப் பரீட்சை 20 ஆம் திகதி வியாழக்கிழமை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும், செயல்முறைப்பரீட்சை 22 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன. மேற்படி பாடசாலையில் இப்பயிற்சியில் பங்கு கொண்ட சகல மாணவர்களும் தமது அனுமதி அட்டையுடன் பரீட்சைக்குத் தோற்றுமாறு பாடசாலை அதிபர் திரு. ஐ. பஞ்சாட்சரன் தெரிவிக்கிறார். (க - 27)


**CEYGMA PUMPS**
**சிக்மா பம்ப்ஸ்**

மண்ணெண்ணெயில் இயங்கும்

● விலியர்ஸ் (Villiers) MK 12
● குபோடா (Kubota) KS 160

**என்ஜின் பொருத்தப்பட்ட சிக்மா பம்ப்ஸ் இப்பொழுது கையிருப்பில் உண்டு.**

குறிப்பிட்ட தொகையே வந்திருப்பதனால் உங்கள் தேவைகளை உடனே பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

✶ விலியர்ஸ் MK 12 என்ஜின் பொருத்தியது — Rs. 7950.00
✶ குபோடா KS 160 என்ஜின் பொருத்தியது — Rs. 9300.00

மற்றும் உங்கள் வீட்டுத்தேவைக்கும் தோட்ட இறைப்பிற்கும் ஏற்ற மின் மோட்டார்களும் எம்மிடம் கையிருப்பில் உண்டு.

**யுனைற்றெட் அக்ரோ என்ஜினியரிங்**
274/1, ஆஸ்பத்திரி வீதி,
(பெரியாஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

தொழிற்சாலை:
நாவற்குளி,
கைதடி.

[சி-2219]



உ
சிவமயம்

## வயாவிளான் தெற்கு

அருள் மிகு
ஞான வைரவப் பெருமான் ஆலய
**மகா கும்பாபிஷேகப் பெருவிழா**
24- 04- 1989

சித்திரை 8(21-04-1989) வெள்ளிக்கிழமைபகல் 12மணி முதல் கிரியைகள் ஆரம்பமாகி சித்திரை 11(24-4-1989) திங்கட்கிழமை காலை 7 மணி முதல் தூபிகள் அபிஷேகங்கள்நடைபெற்று, காலை 10.20 மணிக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.
அத்தருணம் அடியார்கள் யாவரும் பங்குபற்றி ஞானவைரவப்பெருமானின் அருள் பெற்றேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலய பரிபாலனசபை.

20-4-1989
வயாவிளான்.

(C/2222)



## கொம்பியூட்டர் பயிற்சி
Diploma in Data Processing & Computer Programming Course

புதிய பிரிவுகள்:

BASIC : 26-04-89 (Week day) 10.00a.m
ADVANCED BASIC : 29-04-89 (Weekend) 1.00p.m

1st Payment Rs. 500/-

IBM SUPER/XT, IBM COMPATIBLE, APPLE உட்பட பல நவீன Computerகளில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

✶ மல்லாகம் கிளையிலும் சில பிரிவுகள் 4.00 மணிக்கு ஆரம்பமாகும்.

IDP **Computer Centre,**
342, K.K.S. Road, Jaffna.
(சிவன் கோயிலடி)
Branch: 7th Mile Post, Mallakam.

[சி-2268]



## முதலாம் வருட பிறந்ததின வாழ்த்து



**செல்வி கௌசினி**

ஊரெழு கிழக்கில் வசிக்கும் இராசையா சரோஜா தேவி தம்பதிகளின் செல்வப் புதல்வி கௌசினி இன்று (20-04-89) தனது முதலாவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அப்பம்மா, மாமன்மார்கள், அத்தைமார்கள், பெரியப்பாமார்கள், பெரியம்மாமார்கள்,சித்தப்பாமார்கள், சித்திமார்கள் அன்ரிமார்கள், அண்ணாமார்கள். அக்காமார்கள், தங்கைமார்கள், மச்சாள்மார்கள், மச்சான்மார்கள் மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் துர்க்கை அம்மன் துணையால் பல கலைகளும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென நலமுடன் வாழ்த்துகின்றார்கள்.

ஊரெழு கிழக்கு. (10605)



கப்பலில்
## ★ வேலை வாய்ப்புக்கள் ★

நான்கு கிரேக்க கப்பல்களில்
● உடனடி வேலை வாய்ப்புக்கள் ●

✶ 2nd Officers ✶ Bosun
✶ 3rd Engineer ✶ Oiler
✶ Radio Officers ✶ AB

மேற்காணும் பதவிகளுக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக வந்து தொடர்பு கொள்ளவும்.

✶ சுவிஸ் ✶ இத்தலி
✶ பிரான்ஸ் ✶ ஜேர்மனி
✶ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்குப் போவதற்கும் உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:
**NATIONAL SHIPPING & TRAVELS,**
New Lalitha Building,
185/2, KASTHURIAR ROAD,
JAFFNA.

(C/2284)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்து விட்டது!

தமிழ் - 9
தமிழ் - 10

பயிற்சி விளக்கங்களும் விடைகளும்

குமரன் புத்தகசாலை,
201, டாம் வீதி,
கொழும்பு - 12.

(201)



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப்பெறுவதற்கான

கம்பியூட்டர் கல்வி

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

ஆரம்பம்: 30. 04. 1989
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்)

சேரும்போது செலுத்தவேண்டியது ரூ. 500/– மாத்திரம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி. குளிரூட்டப்பட்ட அறையில் (IBM COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும்.

பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால், விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்துகொள்ளவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 29. 04. 1989




UNIKCO COMPUTER CENTRE
No. 5, மின்சார நிலைய வீதி,
2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உபதபாற் கந்தோர் அருகாமை)

(சி/2300)


கிளிநொச்சி மாவட்ட

# பாடசாலைகளில் பால் வழங்கும் ஏற்பாடுகள் துரிதம்

## உற்பத்தியாளர்களிடமிருந்து லீற்றர் 6 ரூபாவுக்கு கொள்வனவு

வட்டக்கச்சி, ஏப்ரல் 20

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு ஜனசக்தித் திட்டத்தின் கீழ் மதிய உணவாக பால் வழங்குவது மே மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும்.

இது தொடர்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பால்பொருள்கள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் பாலை விநியோகிக்கும்.

இச்சங்கம் பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து லீட்டர் ஆறு ரூபா வீதம் பாலைக் கொள்வனவு செய்யும்.

இம்மாவட்டத்தில் சகல பகுதிகளிலும் இச்சங்கக்கிளைகளை திறப்பதற்கு சங்கத்தின் தலைவர் திரு. கே. துரைராசா அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார். [இ-163]


Thanks Giving

THANK YOU
Dear
Infant Jesus
Mother Mary
St. Anthony
St. Jude
For
Favours Granted

S C.N.R

(192)


கணித - விஞ்ஞான ஆசிரியர்களை

## யாழ். கல்வித்திணைக்களத்துக்கு வருமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப். 20

அண்மையில் சேவை முன் பயிற்சியை முடித்து வெளியேறிய கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களைப் பெற்றவர்களை யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வரும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் நாளை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் 1.30 மணி வரை கல்வித் திணைக்களத்துக்கு வரவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

அண்மையில் கல்வி அமைச்சினால் பெயர் வெளியிடப்பட்ட 107 பேருக்கு நியமனக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டிருந்தன.

நியமனக் கடிதங்களைப் பெற்றவர்கள் தமது பிறப்புச் சான்றிதழ், கிராம சேவகர் சான்றிதழ், கடைசியாக படித்த பாடசாலை அதிபரின் நற்சான்றிதழ் பத்திரம் என்பவற்றின் மூலப்பிரதிகளையும்–

ஜீ. சி. ஈ. சாதாரணதரம், உயர்தரங்களுக்கான பெறுபேறுகள் முன் சேவை பயிற்சி சான்றிதழ் என்பவற்றின் நிழற் பிரதியையும், மூலப் பிரதியையும்–

முன்பு ஆசிரிய சேவையில் இருந்திருந்தால் அது பற்றிய தகவல்களையும் நியமனக் கடிதம், தேசிய அடையாளக் கார்ட் என்பனவற்றையும்– எடுத்து வரவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

(க-9)


காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
காரைநகர்

வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திர மூலம் விற்பனை

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 3000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனை செய்யப்படும். சாக்குகளைப் பெற விரும்புவோர் ரூபா 250.00 ஒப்பந்த முற்பணமாக வைப்புச் செய்து தலைமைக் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று 25. 04. 1989 நண்பகல் 12 மணிக்கு முன்பாக விண்ணப்பிக்கவும்.

பொது முகாமையாளர்,
காரைநகர் ப.நோ.கூ.சங்கம்.

பணிமனை,
காரைநகர் ப.நோ.கூ.சங்கம்,
காரைநகர்.
18. 04. 1989.

(C/2224)


## அகில இலங்கை சமாதான நீதிவான்

ஓய்வு பெற்ற ரயில் நிலைய அதிபரான திரு. ஏ.வி. ஸ்ரானிஸ்லோஸ் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்பு யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## இன்றைய கிரிக்கெட்

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் பெனின்சுலா வெற்றிக் கேடயத்துக்காக நடத்தும் கிரிக்கெட் போட்டிகளில் இன்று காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகும் கால் இறுதிப் போட்டியில் யாழ். ஜொலிஸ்டார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் ஆடவுள்ளது. (இ-6)

## பரந்தன் இளைஞர் வட்டம் சாம்பியன்

கிளிநொச்சி ஏப்ரல் 20

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டியில் பரந்தன் இளைஞர் வட்டம் சாம்பியனாகியது.

பரந்தன் இளைஞர் வட்டம் முதலாவது இடத்தையும், அருணோதயா விளையாட்டுக் கழகம் இரண்டாவது இடத்தையும் உருத்திரபுர விளையாட்டுக்கழகம் மூன்றாவது இடத்தையும் பெற்றன.

இப் போட்டி கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. வேலுப்பிள்ளையின் தலைமையில் பரந்தன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் திரு. அமிர்தலிங்கமும், கௌரவவிருந்தினர்களாக உதவி அரசாங்க அதிபர் திரு. துரைராஜாவும், சுகாதார வைத்திய அதிகாரி திரு. சிவகுமாரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களைத் திருமதி அமிர்தலிங்கம் வழங்கினார். (ச-ரி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சிவத்திரு. கா இரத்தினசபாபதி
[ஓய்வுபெற்ற அதிபர், நதாலை தமிழ் வித்தியாலயம்]

தோற்றம்: 04-09-1925
மறைவு: 01-05 1988
[சித்திரா பௌர்ணமி]

அன்பான எங்கள் பப்பா; எங்களைக் காலமெல்லாம் கலங்க வைத்துவிட்டு புன்முறுவல் பூத்த முகத்துடன் உங்கள் குலதெய்வமான சீரணி நாகம்மாளின் திருவடியைச் சேர்ந்தீர்களா? ஓராண்டு கடந்து விட்டது; இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உங்கள் பிரிவுத் துயரால் பெருகி யாடும் எங்கள் கண்ணீருக்கு அணை போடமுடியாது.

மனைவி, பிள்ளைகள்,
மருமகள், றஜீஸ்.

கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

[191]

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வேலுப்பிள்ளை கனகலிங்கம் இராசலிங்கம்
(கனகலிங்கம் சுருட்டு அதிபர்)

தாயின்மடியில்: 06-01-1911
இறைவன்திருவடியில்: 04-05-1985

திதி: 20 - 04 - 1989
(வியாழக்கிழமை)

அன்பின் திருவுருவே! பாசத்தின் பிறப்பிடமே! தானதருமம் ஆனவர்க்கெல்லாம் வாரிவழங்கிய பாரி வள்ளலே! எம் வாழ்வின் கலங்கரை விளக்கே! காலமெல்லாம் ஆதரவற்றவர்களுக்கு ஆலமாமரமாய் நின்று அருள் நிழல் தந்து காத்த எம் அன்புத் தெய்வமே! தாங்கள்எம்மைவிட்டுப்பிரிந்துஇன்றுடன் நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டதே! நான்கு ஆண்டுகள் கடந்தாலும்உங்கள் திருமுகம்எம் மனங்களிலிருந்து மறையாது. தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

''வசந்தம்''
மானிப்பாய்.

(202)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கி. ரவீந்திரன்

மலர்வு: 29- 03- 1966
உதிர்வு: 02- 04- 1988

பாசத்தின் திருவிளக்காய்த் திகழ்ந்த ரவியே! நீ மறைந்த வருடம் ஒன்றும், ஓர் கணம் போல் மறைந்து விட்டதே ரவியே! நீ எம்மோடு வாழ்ந்த நாட்கள் என்றும் எம்நெஞ்சில் நிலைத்து நிற்கின்றது ஐயா! வருடம் மாறிப் பல வருடங்கள் ஆனாலும் உன் உருவம் எம்மைவிட்டு என்றும் மறையாது ரவியே!

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்;
உன் பிரிவால் துயருறும்:
தாய், சகோதரிகள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

வறுத்தலைவிளான்,
தெல்லிப்பளை.

(204)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 14-04-1914
மறைவு: 14-04-1984
திதி: 20-04-1989

கதிரவேலு நன்னித்தம்பி
(ஓய்வுபெற்ற பிஸ்கால் உத்தியோகஸ்தர்)

அப்பா நீங்கள் மறைந்து ஆண்டு ஐந்து சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சத்தை விட்டு அகலாது.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

25, மருதடி றோட்,
யாழ்ப்பாணம்.

(10596)

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு: 21- 10- 1961
உதிர்வு: 14- 04- 1989

சச்சிதானந்தம் தயாபரன் (தயா)

பிறந்துவிட்டது புதுவருடம் ஆனால் அதோடு
எமது கண்ணீரும் தயா தயா என்றாகிவிட்டது. ஆம்
ஆலடியில் உனதுயிரை அடகு வைத்தாயா? இல்லை
எம் இதயத்தில் மாறாத வேதனையை
நிரந்தரமாக்கி விட்டாய் தயா!
நோர்தேண் பார்மஸிக்கோர் சேவையாளனாய்
உதித்தவனே – உன்
நேர்குணத்தால் எம்மனதில் நீங்கா இடம் பெற்றவனே!
மணக்கோலம் காணக் காத்திருந்தோம் நாம் - ஆனால்
பிணக்கோலத்தைக் காட்டி அன்றோ
தவிக்க வைத்துவிட்டாய் – தயா!
தயா தயா என எம்மைத்தேட வைத்துவிட்டு
காற்றோடு கலந்தாயே!
எம் மனங்களிலே மாறாத ரணமாக மாறி
விட்டவனே தயா!
புதுவருட மறுநாளே எம் இதயத்தில் இரத்தக்
கண்ணீரை உருவாக்கி விட்டாயே?

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
நோர்தேண் பார்மஸி ஊழியர்களும்,
நண்பர்களும்.

562, ஆஸ்பத்திரி றோட்,
யாழ்ப்பாணம்.

(10625]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.

**பொருள்:**

தம்முடைய ஆரோக்கியத்தைக் காத்துக் கொள்கிறவர்கள் அழகைக் கொண்டு மயங்கி அற்பசுகத்தை விலைக்காகப் பரப்புகின்ற விலைமாதருடைய தோள்களைத் தழுவமாட்டார்கள்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
20- 04 - 1989 த. பெ. இல: 23

# அடிவயிற்றில் அதிரடி!

பெற்றோல், டீசல் ஆகிய பிரதான எரிபொருள்களின் விலைகள் நேற்றுத் தொடக்கம் உயர்த்தப்பட்டுள்ளன.

பிரேமதாச அரசு பதவிக்கு வந்த இரண்டு மாதங்களில் வந்த முதலாவது விலை உயர்வுகள் இவை. அரசின் புதிய வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் பட்ட பின்னர் பாவனைப் பொருள்களுக்கு எதேச்சையாக அறிவிக்கப்பட்ட முதலாவது விலை உயர்வுகளும் இவையே.

அரசாங்கம் தனது வரவு - செலவுத் திட்டத்தில் சாதாரண பாவனைப் பொருள்களுக்கு விலை உயர்வுகளை அறிவிக்கவில்லை. ஆடம்பரப் பொருள்களுக்கு மட்டும் வரி உயர்வு மூலமான மறைமுக விலை உயர்வுகளைக் கொண்டு வந்திருந்தது.

அரசின் அந்த நடவடிக்கை, தான் ஏழை மக்களின், சாதாரண மக்களின், சாமான்யனின் பக்கம் நிற்பதாகக் காட்டுவதற்கு பூணப்பட்ட வேடமே என இன்று நினைக்க வேண்டியுள்ளது.

பிரபல இடதுசாரித் தலைவர், பொருளியல் நிபுணர் காலஞ்சென்ற டாக்டர் என். எம் பெரேரா நிதி அமைச்சராக இருந்த காலத்தில், புதிய உத்தி ஒன்றை அறிமுகப்படுத்தினார்.

பாவனைப் பொருள்களுக்கு விலை உயர்வுகளை வரவு - செலவுத் திட்ட உரையில் அறிவிப்பதில்லை. ஆனால் அதன் பின்னர் ஒவ்வொரு பொருளுக்கும் வர்த்தமானி மூலம் விலை உயர்வைக் கொண்டு வருவது- இதுவே டாக்டர் என். எம். பெரேராவின் தந்திரமிக்க உத்தியாக இருந்தது.

அந்த உத்தியை பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அளவுக்கு அதிகமாகக் கைக்கொண்டது. எல்லா விலை உயர்வுகளையுமே நள்ளிரவோடு, நள்ளிரவாக வர்த்தமானி மூலம் அறிவித்துவிடும் வழியை வழக்கமாக்கிக் கொண்டது.

அதற்குப் பதில் இப்போதைய அரசு புதிய உத்தி ஒன்றை வகுத்துள்ளதோ என்று எண்ணத் தோன்றுகிறது. குறிப்பிட்ட பாவனைப் பொருளுடன் சம்பந்தப் பட்ட அல்லது அதனைக் கையாளும் நிறுவனம் நட்டம் போவதாகக் கூறி, அந்தப் பொருளின் விலையை ஒரு பத்திரிகை அறிக்கை மூலம் தெரியப்படுத்திவிடும் உத்தியாக அது இருக்குமோ என்று நேற்றைய விலை உயர்வுகள் பற்றிய அறிவிப்பு நினைக்க வைக்கிறது.

ஆகையால் வாசகர்களே — பாவனையாளர்களே — கவனம்! பல அத்தியாவசியப் பொருள்களைக் கையாளும் நிறுவனங்கள் இருந்தது இருந்தாற்போல் நட்டம் காட்டலாம்! அந்தப் பொருள்களின் விலைகளும் வெறும் வானொலி, பத்திரிகை அறிக்கைகளோடு உயரலாம்.

எரிபொருள்கள் இன்றைய சூழ்நிலையில் அத்தியாவசிய பாவனைப் பொருள்களாகக் கருதப்படவேண்டியவை. அவை வாகனங்களுக்குத் தேவைப்படும் ''தண்ணீர்'' மட்டுமல்ல. போக்குவரத்துத் துறையை மட்டுமே சார்ந்தவையும் அல்ல. விவசாயம், கைத்தொழில் உற்பத்திகள், அவற்றை ஏற்றி, இறக்கி எடுத்துச் சென்று சந்தைப்படுத்தல் ஆகிய பன்முகப்பட்ட பணித் துறைகளைச் சார்ந்தவை.

அதனால், எரிபொருள்களின் விலைகள் உயர, ஏனைய சகல பொருள்களின் விலைகளும் இயல்பாகவே உயரும். இது அரசாங்கத்துக்குத் தெரியாதா? இல்லையேல் அதிகாரிகளுக்குத் தெரியாதா?

பிரதானமான பாவனைப்பொருள்களில் கை வைத்து மக்களின் வயிற்றில் அடித்திருக்கிறது அரசு! வரவு - செலவுத் திட்டத்தில், சாதாரண மக்கள் மீது கை வைக்கவில்லை என்று கூறிப் பிரமாதப்படுத்திய ஒரு மாதத்தில், சாமான்யர்களின் அடிவயிற்றில் அடித்து விட்டது பிரேமதாச அரசு!

பொருளியல் பரப்பில் இப்படி மக்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்து அதிரடி கொடுப்பது, நல்ல சகுனம் அல்ல என்று எச்சரிக்கிறோம்.

ஏற்கனவே வீக்கம் கண்டிருக்கும், பணவீக்கம் உயர்ந்திருக்கும் நாட்டில், திடீர் விலை உயர்வுகள், மறைமுக விலை உயர்வுகள் நிலைமையை மேலும் மோசமாக்கும். ஏற்கனவே உண்டான வீக்கம் மேலும் உப்பி நாட்டுப் பொருளாதாரம் வெடித்துச் சிதறவும் கூடும். உற்பத்தியை அதிகரிக்கும் மார்க்கத்தைக் காண்பதற்குப் பதில், விலை உயர்வுகளைச் செய்து கொண்டு, நொண்டிச் சாட்டுக்களைக் கூறி, மக்களை ஏமாற்ற அரசு நினைக்குமானால், அது தன்னைத்தானே ஏமாற்றுவதாக முடியும் என்பதை நினைவில் கொள்ளட்டும்.

# சீன மாணவர் ஆர்ப்பாட்டம் தினமும் தொடருகிறது.

பீகிங், ஏப்ரல் 19

சீன மாணவரின் ஆர்ப்பாட்டங்கள் பீகிங்கில் தினமும் நடந்துவருவதாக அறிவிக்கப் பட்டது.

நேற்று சீனக்கம்யூனிஸ்ட் கட்சித்தலைமை அலுவலகம் முன் மாணவர் ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் அலுவலகத்தினுள் நுழைய முயற்சித்தனர்.

சீனப்பொலீஸார் மாணவரைத் தடுத்து நிறுத்தினர். ஜனநாயகம் நீடூழி வாழ்க என்று மாணவர்கள் அப்போது கோஷம் எழுப்பினர். [எ]

# பாக்-சீன இராணுவபலம் அதிகரிப்பு

# ஆசியாவின்பாதுகாப்புக்கு ஆபத்து!

## இந்திய அரசு எச்சரிக்கை

புதுடில்லி, ஏப்ரல் 19

பாகிஸ்தானும் சீனாவும் இராணுவப் பலத்தைப் பெருக்கி வருவது குறித்து இந்தியா கவலை தெரிவித்து உள்ளது.

ஆசியாவின் பாதுகாப்புக்கு ஆபத்தாக இருநாடுகளும் இருப்பதாக இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட 1989 வருடாந்த அறிக்கையில் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப் பட்டிருப்பதாவது!

பாகிஸ்தான் அணு ஆயுதத் தயாரிப்பில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

அமெரிக்காவிடமிருந்து நவீன கடற்படைக் கப்பல்களில் பொருத்தக் கூடிய ஏவுகணைகளைப் பாகிஸ்தான் பெற்றுள்ளது.

இவை 60 மைல் தூரத்துக்குச்சென்று தாக்கக் கூடிய வல்லமை வாய்ந்தவை.

சமாதானம் பற்றிப் பேசிக்கொண்டு பாகிஸ்தான் பிரதமர் பெனசிர் பூட்டோவும் படைப்பலத்தை அதிகரிப்பதில்தான் தீவிரமாக இருக்கிறார்.

ஜனநாயக அரசு உதயமான பின்னரும் பாகிஸ்தானின் போக்கில் மாற்றம் ஏற்படவில்லை.

சீனா தனது படைபலத்தை நவீன மயப்படுத்துவதுடன் நிற்கவில்லை; ஆசியப்பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கும் ஆயுதங்களை விற்று வருகிறது.

சீனா தனது கடற்படைப் பலத்தை அதிகரித்து வருவதை கவனத்துக்கு எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

இப்படி பாதுகாப்பு அமைச்சு அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது,

நாளை (20-4-89) வியாழக்கிழமை இந்திய நீண்ட தூர ஏவுகணை 'அக்னி'யை பரீட்சித்துப் பார்க்க இருக்கின்றது. அத்தருணத்தில் இந்த அறிக்கை வெளியிடப் பட்டிருக்கிறது.

'அக்னி' ஏவுகணை 1,560 மைல் தூரம் சென்று எதிரி இலக்கைத் தாக்கக் கூடிய வல்லமை பெற்றிருக்கிறது

(எ)

## ஆப்கனில் ஐ.நா. தலையீட்டை அமெரிக்கா எதிர்க்கும்!

ஆப்கன் பிரச்சினையில் கிளர்ச்சிக்காரர்கள் விரும்பினால் ஒழிய ஐ.நா. தீவிர பங்கெடுப்பதை அமெரிக்கா எதிர்க்கும் என்று அறிவிக்கப் பட்டது.

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் அமெரிக்காவின் புதிய பிரதிநிதி தோமஸ் பிக்கரிங் பேசுகையில் இத்தகவலை வெளியிட்டார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் சோவியத் துருப்புக்கள் ஆப்கனில் இருந்து வெளியேறியது. இனியார் ஆப்கனை ஆளவேண்டும் என்பதை ஆப்கன் மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

சமாதானத்தையோ, வருங்கால அரசியல் நிலை ஒன்றையோ ஆப்கன் மக்கள்மீது திணிக்க இது தருணமல்ல.

இப்படி அமெரிக்கப் பிரதிநிதி சொன்னார். [எ]

## உலக நீதிமன்ற நீதிபதியாக இந்தியப் பிரதம நீதியரசர்

உலக நீதிமன்ற நீதிபதிகளுள் ஒருவராக இந்திய உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் திரு. ஆர். எஸ். பதக் நேற்றுத்தெரிவு செய்யப்பட்டார்.

இப்பதவிக்கு பாகிஸ்தான், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளும் போட்டியிட்டன.

ஐ. நா. பொதுச்சபையும், பாதுகாப்புச்சபையும் புதிய நீதிபதி ஒருவரைத் தெரிவு செய்தன.

முதலாவது சுற்று வாக்களிப்பிலேயே இந்தியாவுக்கு 84 நாடுகள் ஆதரவளித்தன. மொத்தம் 154 நாடுகள் வாக்களிப்பில் சலந்து கொண்டன.

உலக நீதிமன்றத்தில் 15 நீதிபதிகள் உள்ளனர். இவர்களில் ஒருவராக இந்தியா சார்பில் இருந்த டாக்டர் நாகேந்திரசிங் கடந்த டிசம்பரில் காலமானார். உலக நீதிமன்றத்தில் நீதிபதி பதவி வகிக்கும் மூன்றாவது இந்தியர் என்ற பெருமை திரு. பதக்குக்கு கிடைத்தது. (எ)

## ★ இந்தியாவின் பொருளாதார முற்றுகையில் இருந்து மீள நேபாளம் முயற்சி

காத்மாண்டு, ஏப்ரல் 19

இந்தியாவின் பொருளாதார முற்றுகையை முறியடிக்கும் நடவடிக்கைகளை நேபாளம் எடுத்து வருகிறது.

இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உடன்பாடு கடந்த மாதம் 23ஆம் திகதி காலாவதியானது. அதன்பின்னர் எரிபொருள் உட்பட பல பொருள்களை நேபாளம் செல்லும் பாதைகளை இந்தியா மூடிவிட்டது.

இதைத் தொடர்ந்து நேபாளம் பொருளாதார முற்றுகைக்கு இலக்காகியது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நேபாளத்தில் உள்ள கைத்தொழில் மற்றும் தொழிற்சாலைகள் இயங்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது

இந்தியாவிடம் இருந்து இரண்டு லட்சம் தொன் எரிபொருளை ஆண்டுதோறும் நேபாளம் பெற்று வந்தது.

இப்போது இது நிறுத்தப் பட்டுவிட்டதால் சிங்கப்பூரில் இருந்து 7 ஆயிரம் தொன் டீசலைக் கப்பல்மூலம் பெற நேபாளம் நடவடிக்கை எடுத்தது.

இந்த டீசலைக்கொண்டுவந்த எண்ணைக் கப்பல் அதனை இறக்கமுடியாமல் கல்கத்தா துறைமுகத்தில் தரித்து நிற்கிறது.

நேபாளத்தின் கடல் தொடர்பு கல்கத்தா துறைமுகம் ஊடாக மட்டுமே கொள்ள முடியும்:

இந்த நிலையில் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்க சீனாவுடன் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொள்ள நேபாளம் முன்வந்துள்ளது.

விமானமூலம் சீனாவில் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்ய இந்த உடன்பாடு வழி வகுக்கும்.

இத்தகவலை நேபாள வர்த்தக அமைச்சர் ரபிந்திரா சர்மா தெரிவித்தார்.

நேபாளம் சுதந்திரமான வெளியுறவுக் கொள்கை ஒன்றைக் கடைப்பிடிப்பதை இந்தியா விரும்பவில்லை: தற்போதைய வர்த்தக பிரச்சினைக்கான பின்னணியே இதுதான் என்று நேபாளம் கூறுகிறது. (எ)

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ராமமூர்த்திக்கு கடும் எதிர்ப்பு

சென்னை, ஏப். 19

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக திரு. கே. ராமமூர்த்தி எம்.பி நியமிக்கப்பட்டதற்கு தமிழ்நாடு சட்ட சபையில் உள்ள இந்திரா காங்கிரஸ் எம்.எல். எக்களில் பெரும்பான்மையோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

18 காங்கிரஸ் எம். எல். ஏக்கள் பிரதமருக்கு விடுத்த வேண்டுகோள் ஒன்றில் திரு. ராமமூர்த்தியின் நியமனத்தை மறுபரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொண்டனர்.

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் திரு. ராமமூர்த்தி. காமராஜரின் வாரிசு மூப்பனார் என்று அறிவித்த பிரதமரே மூப்பனாரை பதவியில் இருந்து நீக்குவதா?

—இப்படி அதிருப்தியடைந்த எம். எல். ஏக்கள் கேட்டுள்ளனர். (எ)

## தடைநீக்கம்

போலந்து நாட்டில் சொலிடாரிட்டி தொழிற்சங்கம் மீது விதிக்கப்பட்டிருந்த 7½ ஆண்டு கால தடை நேற்று நீக்கப்பட்டது.

நீதிமன்றம் ஒன்று இத் தடையை நீக்குவதாக அறிவித்தது

வருசிற ஜூனில் நடத்தப்படவுள்ளபோலந்து நாடாளுமன்றப்பொதுத் தேர்தலில் சொலிடாரிட்டி தொழிற்சங்கமும் போட்டியிடும். [எ]

## புனிதமலையில் தங்கம் கண்டுபிடிப்பு

டப்ளின், ஏப்ரல் 19

அயர்லாந்து நாட்டின் மேற்குப் பகுதியில் 'குரோக் பட்ரிக்' என்ற புனிதமலை உள்ளது.

இங்கு 1,500 ஆண்டுகளுக்கு முந்திய கிறிஸ்தவ ஆலயம் உள்ளது.

ஜூலை மாதம் கடைசி ஞாயிறு மட்டும் இங்கு அரை லட்சத்துக்கு மேற்பட்ட கிறிஸ்தவ மக்கள் வந்து பிரார்த்தனை செய்வர்.

இந்த மலையில் பெருமளவு தங்கம் இருப்பது இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே தங்கத்தை வெட்டி எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இதன் காரணமாக புராதன கிறிஸ்தவ ஆலயம் அழிந்து விடும் நிலை உருவாகி இருக்கிறது. (எ)

<u>தமிழ்ப் பகுதிகளில்:</u>

# கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி: ஜேர்மனி, ஆஸ்திரேலியா உதவும்

திருகோணமலை, ஏப்ரல் 20

கால்நடை வளர்ப்புக்கு முக்கியமாக ஆட்டுப்பண்ணைகளை அமைப்பதற்கு உதவ ஜெர்மன் தூதுவர் முன்வந்துள்ளார். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மூன்று பெரிய ஆட்டுப்பண்ணைகளை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வடக்கு - கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவிகளைப் பெறும் பொருட்டு மாகாண காணி விவசாய புனர்வாழ்வு அமைச்சர் திரு. சி. எம். கணேசலிங்கம் அண்மையில் ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகர்களைச் சந்தித்து பலதரப்பட்ட உதவிகள் பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

ஜெர்மனியிலிருந்து 'புவர்' வகை ஆடுகளை இறக்குமதி செய்வதற்கும் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கண்டுபிடித்து உடனுக்குடன் சிகிச்சை அளிப்பதற்கான நடமாடும் சிகிச்சை நிலையங்களை அமைப்பதற்கும் ஜெர்மன் தூதுவர் வாக்குறுதி அளித்துள்ளார்.

பால் உற்பத்தியைப் பெருக்கும் முகமாக ஆஸ்திரேலியாவிலிருந்து ''செய்போ'' என்னும் இனப் பசுக்களை இறக்குமதி செய்து பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் ஜெர்மன் தூதுவர் திருமதி ரேனியா ஷான் உறுதியளித்துள்ளார்.

இடம் பெயர்ந்த மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கவும், நீர்ப்பாசன, கல்வி, மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் கனேடியத் தூதுவர் திரு. ரெம்பிள்டன் உறுதியளித்துள்ளதாக அமைச்சர் கணேசலிங்கம் தெரிவித்தார். [ச 50]

## திருமறைக் கலா மன்றத்தின் "தமிழர் பண்பாடும் திருமறையும்"

யாழ். திருமறைக் கலாமன்றம் இன்று வியாழக்கிழமை யாழ். மறைக்கல்வி நடு நிலைய மண்டபத்தில் தமிழர் பண்பாடும், திருமறையும்' என்னும் மகுடத்தில் முழு நாள் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

கருத்தரங்கிற்கு யாழ். ஆயர் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமை வகிப்பார்.

காலை 8.45 மணிக்கு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் வைபவத்தில் 9.40 மணிக்கு ஆய்வரங்கு நடைபெறும்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி சி.பத்மநாதன், கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆகியோர் தமிழர் பண்பாடு பற்றி ஆய்வு செய்வர்.

11 மணிக்கு கண்காட்சி இடம் பெறும். 11.40 மணிக்கு கேள்வி அரங்குநடைபெறும்.

கேள்வி அரங்கின் நடுவர் தலைவர் அருட்திரு கலாநிதி ஆர். யோசப் அடிகள். பங்கு பற்றுவோர்: புலவர் அரியநாயகம், புலவர் ஈழத்து சிவானந்தன் கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ். திரு.மா. வேதநாதன், விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராஜா, எம்.ஏ. கலாநிதி இ. பாலசுந்தரம், கலாநிதி சி. பத்மநாதன், பேராசிரியர் அ. சண்முகதாஸ் கலாநிதி நா. சுப்பிரமணிய

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னோனை முக்கண்ணை!

ஆர்த்து வந்த ஒன்னலரை
அழிக்க வென்று ஈசனது
மூர்த்த மாக வந்துதித்த
முன்னோ னை முக்கண்ணை!
சீர்த்தி யிழந்த செந்தமிழர்
சிறப்பா யென்றும் வாழ்வடையத்
தீர்த்த மாடித் திகழ்ந்து நீ
திருவரு ளென்றுஞ் செய்குவையே!

– கவியரசு வெண்பாமணி
முருககூரியன்.

ஆர்த்து - ஆர்ப்பரித்து, ஆரவாரித்து - கர்ச்சித்து,
ஒன்னலர் - பகைவர்,
முன்னோன், முக்கண்ணன் } விநாயகன்
சீர்த்தி - சிறப்பு
(இன்று நல்லூர் [illegible] பிள்ளையார் தீர்த்தம்)

## சமய சந்திகளில்

### அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம் ஏப், 20

திருநெல்வேலி வெள்ளைப் பிள்ளையார் தேவஸ்தான அலங்கார உற்சவத்தின் தெருவுலா உற்சவம் இன்று நடைபெறும் [க]

### சித்திரா பூரணை உற்சவம்

யாழ்ப்பாணம் ஏப், 20

யாழ் வண்- கிழக்கு வீரமாகாளி அம்பன் கோயிலின் சித்திரா பூரணை உற்சவம் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறும். அப்பொழுது அம்பாள் அலங்கரிக்கப்பட்ட வெள்ளிப்பீடத்தில் எழுந்தருளுவார். (க)

### நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவில்லை

முல்லைத்தீவு, ஏப்ரல் 20

1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் அகதிகளாக்கப் பட்ட கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய், மக்கள் செம்மலை, அளம்பில், குமுழமுனை ஆகிய பகுதியில் தற்காலிகமாக குடியிருக்கின்றனர். இவர்களின் மாதாந்த நிவாரணப் பொருள்கள் சென்ற மூன்று மாதங்களாக வழங்கப்படவில்லை.

இவர்களுக்கான நிவாரணப் பொருள்களை முல்லைத்தீவிலிருந்து கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

செம்மலை, அளம்பில், குமுழமுனைப் பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கக்கடைகளுக்கு எத்தவிதமானசாமான்களும் கொண்டு செல்லப் படாதெனத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

## புதுக்குடியிருப்பு புனிதசூசையப்பர் திருவிழா

புதுக்குடியிருப்பு ஏப் 20

புனித சூசையப்பர் கோயில் திருவிழா மே முதலாம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

நவநாட்கள் ஏப்ரல் 22 ஆம் திகதி ஆரம்பமாகி மே முதலாம் திகதி காலை திருநாட் பலிப்பூசையும் திருச்சுருப பவனியும் நடைபெறும். (க)




ஒரு மனிதர் நபிகள் (ஸல்) அவர்களிடம் வந்து இஸ்லாத்தைப் பற்றிக் கேட்டார். அதற்கு (ஸல்) அவர்கள் இரவும் பகலும் ஐந்து வேளை தொழுகை நிறைவேற்ற வேண்டும் என்றார். இவற்றைவிட வேறு இல்லையா? எனக்கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் இல்லை, சுன்னத்களைத் தவிர, என்றார். பின்னர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இன்னும் ரமழான் மாதத்தில் நோன்பு வைப்பதுமாகும். இதைவிட மேலதிகமாக இல்லையா? என்று அம்மனிதர் கேட்டார். இல்லை, சுன்னத்தான நோன்புகளைத் தவிர எனப்பதிலுரைத்தார்.

ஸஹர் முடிவு 4-26
நோன்பு திறக்கும் நேரம் 6 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற

* பட்டுப் பிடைவைகள்
* பட்டு வேஷ்டி சரல்வைகள்

மற்றும்

இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்

**மயூரா சென்ரர்**

13 B, நவீன சந்தை யாழ்ப்பாணம்.



# உதயன்

20 - 04 - 1989 வியாழக்கிழமை



சேட்டிங் சூட்டிங்

* குழந்தைகளுக்கான ஆடைகள்

சகலவிதமான

* றெடிமேட் ஆடைகளுக்கு

சிறந்த இடம்

**மயூரா சென்ரர்**

13 B. நவீன சந்தை, :: யாழ்ப்பாணம்.


## இந்தியப்படையுடன் சென்றவர் 5ஆம் நாள் பிணமாக மீட்பு

### மரண விசாரணையில் சாட்சியம்

மட்டக்களப்பு, ஏப்ரல் 20 இந்தியப்படையினரால் அழைத்துச்செல்லப்பட்ட ஒருவர் 5 நாள் புதைகுழியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இச் சம்பவம் மட்டக்களப்பு கட்டுமுறிவு கிராமத்தில் நடைபெற்றது.

அதேயிடவாசியான பத்தக்குட்டி மரகதம் [40] என்பவர்தான் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது மரண விசாரணை பதில் நீதிபதி திரு. கா. தங்கவடிவேல் முன்னிலையில் நடைபெற்றது.

இறந்தவரின் மனைவி த. அன்னம்மா [38] சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

சம்பவதினம் இரவு 7 மணியளவில் வீட்டிலிருந்த சமயம் இந்தியப்படையின் ''பெரிய ஐயா'' அழைத்து வரச்சொன்னார் என்று கூறி எனது கணவரை அழைத்துச் சென்றனர். அன்றிரவு வீடு திரும்பவில்லை.

மறுநாள் முகாம் சென்று விசாரித்த போது விடுதலை செய்யப்பட்டதாகக் கூறினார்கள். ஆனால் அவர் வீடுதிரும்பவில்லை.

5 ஆம் நாள் ''பெரியஐயா'' வரச்சொன்னதாகக் கூறி என்னையும் பிள்ளைகளையும் அழைத்தனர். நாங்கள் முகாம் சென்றோம் அங்கு கணவரை படையினர் அடிப்பதைக்கண்டோம் பிள்ளைகள் இதனைக் கண்டு அழுதனர்.

சில நிமிடங்களால் கணவனை படையினர் அருகிலுள்ள கடைக்கு அழைத்துச் சென்று சுவரை இடித்து அவர்மேல் தள்ளிவிட்டனர். சுவர் அவர் மேல் விழுவதை என் கண்ணால் கண்டேன். அந்நேரம் படையினர் எம்மை விரட்டி அனுப்பிவிட்டனர்.

மறுநாள் அப்பகுதியில் எனது கணவரின் சடலம் புதைக்கப்பட்டது என்ற தகவல் கிடைத்தது. கிராம சேவை அலுவலகர் மூலம் பொலிஸில் புகார் செய்தேன். —என்றார்.

பிரேத பரிசோகனை நடாத்திய டாக்டர் எஸ். செபநாயகம் சாட்சியமளிக்கையில்; வெளிக்காயம் இல்லை உட்காயம் இருந்தது ஈரல் சிதைவு காணப்பட்டது. இடதுபக்கம் 5ம் விலா எலும்பு முறிந்திருந்தது என்றார்.

இறுதியில் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (ஒ-21)

## கிண்ணியா மோதல் சம்பவம்:

## கைதானவர்களில் இருவர் இலங்கைப் படையினர்

கொழும்பு. ஏப் 20 திருமலை மாவட்டத்தில் கிண்ணியா பகுதியில் நடந்த மோதல் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட 15 பேரில் இருவர் இலங்கைப் படையைச் சேர்ந்தவர்கள் என்று கொழும்பில் உள்ள இந்திய ராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

கைதானவர்கள் அமைதிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேல் விசாரணை நடைபெறுகிறது என்றும் அவர் சொன்னார். (ஒ-எ)

## மருந்து விலைகள் குறைந்தன

கொழும்பு, ஏப்ரல் 20 இறக்குமதி செய்யப்பட்ட ஆங்கில மருந்துகளின் விலைகள் 18 சதவீதம் குறைக்கப்பட்டே கொழும்பில் விற்கப்படுகின்றன.

அரசு நிறுவனமான ''ஒசுசலவில்'' 150 ரக மருந்துகள் குறைந்தவிலையில் விற்கப்படுகின்றன.

இன்னும் அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்படும் 750 மருந்து வகைகளும் குறைந்த விலையில் விற்கப்படும் என்று ''ஒசுசல'' முகாமையாளர் சொன்னார். (ஒ-எ)

## அமைச்சரின் உத்தரவு

கொழும்பு ஏப்ரல் 20 ரயில்வேத்திணைக்களத்தில் உள்ள ஐயாயிரம் வெற்றிடங்களையும் உடனே நிரப்பும்படி போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜயபால மென்டிஸ் உத்தரவிட்டிருக்கிறார். (அ-எ)

## திருமலையில் குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து

# கடைக்குச் சென்ற தமிழர் மீது குண்டர் தாக்கு; 'ரவுண் ஷொப்' எரிப்பு

— உதயன் திருமலை மாவட்டச் செய்தியாளர் —

திருகோணமலை ஏப். 20 திருகோணமலையில் கடந்த 13ஆம் திகதி இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பை அடுத்து அப்பகுதியில் கடைகளுக்குப் பொருள்கள் வாங்கச் சென்ற தமிழர்களும், முஸ்லிம்களும் சிங்களக் குண்டர்களால் தாக்கப்பட்டதாக எமது செய்தியாளர் அங்கிருந்து அறிவிக்கிறார்.

அவர் மேலும் அறிவிப்பதாவது:-

வடகரை வீதியில் அமைந்துள்ள தமிழருக்குச் சொந்தமான 'ரவுண் சொப்' சிங்களக் குண்டர்களால் எரிக்கப்பட்டது. கடை உரிமையாளர்கள் ஓடித் தப்பிவிட்டனர்.

கடற்படைத் தளத்தில் நான்கு தமிழர்களின் சடலங்களும், திருமலை மருத்துவமனையில் இரண்டு தமிழர்களின் சடலங்களும் அடையாளம் காணப்பட்டு உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. சிலர் சம்பவம் நடைபெற்றபோது கடைகளிலும் வேறு இடங்களிலும் ஒளித்திருந்து பின்னர் வீடு திரும்பியுள்ளனர்.

அனுராதபுர வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட 16 பேரில் ஒரு தமிழ்ப் பெண்ணான தர்மலட்சுமி என்பவரது சடலம் திருமலை கொண்டுவரப்பட்டு உறவினரிடம் கையளிக்கப்பட்டது. சினேக்லேன் பகுதியைச் சேர்ந்த றோஸ்மேரி (45) என்னும் பெண்மணியும் அவரின் மகளும் அனுராதபுர வைத்தியசாலையில் இருந்து திருமலை வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைக் கொண்டுவரச் சென்றவர்களே மேற்படி தர்மலட்சுமியின் சடலத்தை அங்கு அடையாளம் காண்பித்தனர். இதனையடுத்து அவரின் சடலம் இங்கு கொண்டு வரப்பட்டது.

### பொலிஸார்

இதுதவிர கத்தி, மற்றும் வாள்வெட்டுக்கு இலக்காகி பல தமிழர்கள் இறந்துள்ளனர். உதவிப் பொலிஸ் அதிபர் பி. கார்த்திகேசு, கான்ஸ்டபிள்களான இராசநாயகம், முருகுப்பிள்ளை ஆகியோரும் பொதுமக்களில் மூவரும் இறந்துள்ளனர்.

மகத்தூன் என்னும் முஸ்லீம் அன்பர் ஒருவர் தமிழர் ஒருவரையும் ஒருதமிழ்ப்பெண்மணியையும் காப்பாற்றி மூன்று நாட்களுக்குப் பின்னர் 3ஆம் கட்டையிலுள்ள அவர்களின் வீட்டுக்குப் பத்திரமாக அனுப்பிவைத்துள்ளார்.

நிலாவெளியைச் சேர்ந்த சந்திரவதனி (9) என்னும் சிறுமியின் சடலம் கடற்படைத் தளத்திலிருந்து அடையாளம் காணப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இவரது தாய் சுவாமிப்பிள்ளை (46) யைக் காணவில்லை.

கணேஷ் (45) என்னும் தமிழரும் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். ஆறு பெண்கள், நான்கு ஆண்கள் வெட்டுக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-150)

## திருமலை கச்சேரி ஊழியர் கடமைக்குச் செல்ல மறுப்பு

திருகோணமலை, ஏப் 20 திருகோணமலைக் கோட்டையிள்ள கச்சேரியில் கடமை புரியும் தமிழ் அரசாங்க ஊழியர்கள் கடந்த திங்கட்கிழமை முதல் பாதுகாப்புக் கருதி கடமைக்குச் செல்ல மறுத்து வருகின்றனர்.

கடந்த 13 ஆம் திகதி மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பைத் தொடர்ந்து அவ்வேளை கச்சேரியில் கடமை புரிந்த இரு தமிழ் ஊழியர்கள் குண்டர்களால் தாக்கப்பட்டனராம்.

எனினும் குண்டுவெடித்த சில நிமிடங்களின் பின்னர் அமைதிப்படையினர் அங்கு சென்று தமிழ் ஊழியர்களைப் பாதுகாப்பாக வெளியே கொண்டுவந்தனர்.

அதன் பின்னர் திங்கட்கிழமை (17 ஆம் திகதி)தான் கடமைக்குச் செல்லவேண்டிய நாள். அன்று கச்சேரிக்கு கடமைக்குச் செல்லும் சுமார் 150 தமிழ் ஊழியர்கள் வடக்கு - கிழக்கு மாகாணசபைச் செயலகத்திற்கு அருகாமையில் கூடித் தங்களுக்குத் தகுந்த பாதுகாப்புத் தராவிட்டால் கடமைக்குச்செல்ல முடியாது என அறிவித்தனர்.

அவர்கள் இப்பொழுது மாவட்ட காணிக்கந்தோருக்குச் சென்று தங்கள் வரவைப் பதிந்துவருகின்றனர்.(ஒ-150)

## பொன்விழா பலிப்பூசை

யாழ்ப்பாணம், ஏப். 20 இலங்கை வங்கியின் பொன் விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் அடைக்கலமாதா தேவாலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை (22ஆம் திகதி) காலை 7-30 மணிக்கு யாழ் ஆயர் பதி. வண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையால் திவ்விய பலிப்பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

இப் பலிப்பூசையில் வங்கி ஊழியர்களையும், வாடிக்கையாளர்களையும், ஆதரவாளர்களையும் பங்கு பற்றுமாறு இலங்கை வங்கி நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

## புங்கன்குளம் சந்தி அருகில் லொறி-மினி பஸ் விபத்து

### எண்மர் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஏப. 20 நேற்று யாழ். கண்டி வீதியில் புங்கன்குளம் சந்திக்கு அருகில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் எட்டுப் பேர் காயமடைந்தனர்.

மண் ஏற்றி வந்த லொறி ஒன்றும் சாவகச்சேரி நோக்கிச் சென்று கொண்டிருந்த மினி பஸ் ஒன்றுமே விபத்தில் சிக்கின. நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இவ்விபத்து நிகழ்ந்ததாக அறிய வந்தது.

மினி பஸ்ஸில் பயணம் செய்த சாரதி, நடத்துனர் உட்பட எண்மர் படுகாயம் அடைந்தனர். இவர்கள் யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்]மேலும் சிலர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

காயமடைந்தோர் விவரம் வருமாறு:

எஸ். மகேந்திரன் [வயது 43) மிருசுவில். த. சுரேஷ்குமார் (வயது 18) மிருசுவில். ந. மணிவண்ணன், (வயது30) மீசாலை. ப. பிரதீப் (8வயது) ஏ. யூட் (12 வயது) மட்டுவில். எஸ். சுவந்தினி (வயது 23) கைதடி. எஸ். ராஜகுமாரி (வயது 33) கைதடி. ஏ. கலிஸ்ரா (வயது 15) மட்டுவில். (ஒ-9)

## பஸ் விபத்தில் 35 பயணிகள் உயிரிழப்பு

புதுடில்லி, ஏப்ரல் 20 உத்தரப்பிரதேச மாநிலத்தில் நேற்று நடந்த பஸ் விபத்து ஒன்றில் 35 பேர் உயிரிழந்தனர் என்று அஞ்சப்படுகின்றது.

இதுவரை 31 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை கர்னாடக கடுகதி ரயில் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 66 ஆக அதிகரித்தது. (ஒ-எ)

## சென்றி அகற்றப்பட்டது

கரவெட்டி, ஏப்ரல் 20 நெல்லியடி மகாத்மா தியேட்டருக்கு முன்பாக இருந்த 'சென்றி' அகற்றப்பட்டுள்ளது. (க-70)

## ஜே. வி. பியையும்----

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தானமாகத் தீர்த்து வைப்பதில் அக்கறை கொண்டிருக்கிறது என்பதை ஜே. வி. பியினர் இதன் மூலம் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி தெரிவித்துள்ள இந்த யோசனை குறித்து மக்கள் விடுதலை முன்னணி எந்த நிலைப்பாட்டினைக்கொண்டு உள்ளது என்பதை அறிந்து கொள்ள அரசாங்கம் ஆர்வத்துடன் இருக்கிறது- இப்படி அமைச்சர் விஜேரத்தின தமது நேற்றைய அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

இம்மாதம் 12 ஆம் திகதி விடுத்த அறிக்கை ஒன்றின் மூலம், ஜனாதிபதி திரு. பிரேமதாச, ஜே. வி. பி. தலைவர் திரு. றோகண விஜயவீரா வுடன் அல்லது செயலாளர் திரு. உபதிஸ்ஸ கமநாயக்கா வுடன் அல்லது அவர்கள் நியமிக்கும் பிரதிநிதி ஒருவருடன் எங்கு வைத்தும் நேரடியாகப் பேசுவதற்குத் தயார் என அறிவித்திருந்தார். [அ-எ]

## தீவிரவாதிகள்......

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன நேற்று பின்வரும் தகவல்களை வெளியிட்டார்.

★ போர் நிறுத்தம் காலாவதியானாலும், விரும்பும் தீவிரவாதிகள் சரணடையலாம்.

★ அரசின் ஒரு தலைப்பட்ச போர் நிறுத்தம் அமுலில் இருந்த ஒரு வார காலத்தில் இடம்பெற்ற வன்செயல்களில் மொத்தம் 110 பேர் உயிரிழந்தனர்.

இதனிடையில்-

இலங்கை அரசு அறிவித்த ஒரு வார கால போர் நிறுத்தம் நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்தது.

இக் காலத்தில் 233 சிங்களத் தீவிரவாதிகள் சரணடைந்தனர் என்று அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. [அ-எ]

## திருமறைச் கலா..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐயர் ஆகியோர் நடுவர்களாக இருப்பர்.

பகல் 1-45 மணிக்கு தாளவாத்தியக் கச்சேரி 3- மணிக்கு விவாத அரங்கு நடுவர்களாக கவிஞர் எம். விக்ரர் (யாழ்-ஜெயம்) பேசுநர்: அருட்திரு. பேராசிரியர் அ. சந்திரகாந்தன் அடிகள், அருட்திரு. ஹில்லறி ஜெபநேசன் அடிகள்.

மாலை 4-45 மணிக்குக் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

செல்வி மதி சேவியர் குழுவினரது கும்மி, மயில் நடனம், திருமறைக் கலாமன்ற கிராமியக் கலைப்பிரிவின் அம்பா, நாவாந்துறை சென்: மேரிஸ் தமிழ் மன்றத்தின் 'மனம் மாறிய மைந்தன்' நாட்டுக் கூத்து என்பன கலை நிகழ்ச்சியில் இடம் பெறும். [இ-5]


## அறிவித்தல்

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் தேவஸ்தான சித்திரத் தேர்த் திருப்பணிக்கு நிதி திரட்டும் விடயத்தில், போலித்தனமான பிரசுரங்களைப் பாவித்து உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் நிதி சேர்க்க சிலர் எத்தனித்துள்ளார்களௌனத் தகவல் கிடைத்துள்ளது. இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் கடும் நடவடிக்கையும் நஷ்டஈடாகப் பெருந்தொகைப் பணமும் அறவிடப்படும் என எச்சரிக்கின்றோம்.

தயவுகூர்ந்து அச்சக முகாமையாளர்கள் மேற்படி தேவஸ்தான அனுமதியின்றி மேற்படி விடயம்பற்றி எவ்வகையான பிரசுரங்களையும் பிரசுரித்துக் கொடுக்க வேண்டாமென்றும்-

பொதுமக்கள் நிதி உதவி செய்வதாயின் தேவஸ்தான விலாசத்திற்கு திரு. பொ. வி. திருநாவுக்கரசு தனுதிகாரி பெயரில் அனுப்பும்படியும் பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

வணக்கம்.

தேவஸ்தானத் தேர்த் திருப்பணிச் சபையினர்

திரு. பொ. வி திருநாவுக்கரசு,
5-ம் வட்டாரம்,
மண்டைதீவு, யாழ்ப்பாணம் (இலங்கை). [195]

## யாழ்ப்பாண யோகப்பயிற்சி நிலையம்

அங்குரார்ப்பண வைபவம் வெள்ளிக்கிழமை 21-04-89 மாலை 3 மணிக்கு யாழ்ப்பாண வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நிர்வாகி
யோகப்பயிற்சி நிலையம்.

257 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (198)


## மரண அறிவித்தல்கள்

### டாக்டர் நடராசா விஜயேந்திரன் ஜே. பி.

நடராசா விஜயேந்திரன் ஜே. பி. [வைத்திய கலாநிதி, அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி] 18-04-1989ஆந் திகதியன்று அகால மரணம் அடைந்துவிட்டார். இவர் முன்னாள் யாழ் மாநகர சபை துணை முதல்வரும், வைத்தியருமான காலஞ்சென்ற அரசபிள்ளை நடராசா ஜே பி., காலஞ்சென்ற திருமதி இலட்சுமிஅம்மா நடராசா [விவாகப் பதிவாளர், யாழ்ப்பாணம்] ஆகியோரின் மூத்த புதல்வரும், விமலாவின் அன்புக் கணவரும், ஜனகன், ஜயந்தன், ஜெனனி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. சி. கனகரத்தினம் [ஜே. பி. யூ. எம், சட்டத்தரணி, தலைவர் வட பிராந்தியப் போக்குவரத்துச் சபை], திருமதி சரஸ்வதி கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும், திரு. நடராசா கணேந்திரன் [இங்கிலாந்து], திருமதி சந்திரா சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், டாக்டர் க. ஜெகதீசன் [அமெரிக்கா], க. கேசவன் [சட்டத்தரணி] டாக்டர் க. சிவனேசன் [அமெரிக்கா], திருமதி நிர்மலா சிவபாதசுந்தரம், ந. சண்முகலிங்கம் [கிராம சேவையாளர், நல்லூர்] ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு. க. சிவபாதசுந்தரம் [கணக்காளர்], அவர்களின் சகலருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20- 4- 1989 இன்று வியாழக்கிழமை காலை 10. 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகச் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். தயவுசெய்து இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
— சி கனகரத்தினம்

''சிவஸ்தான்''
நல்லூர், யாழ்ப்பாணம் [10627]

### செல்வி லீலாவதி சுப்பிரமணியம்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் யாழ். சென். ஜேம்ஸ் பெண்கள் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றி இளைப்பாறிய ஆசிரியையுமான செல்வி லீலாவதி சுப்பிரமணியம் 17-4-89 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஆயுர்வேத வைத்தியர் சி. நா. சுப்பிரமணியம் சின்னம்மாவின் மகளும், காலஞ்சென்ற நடராசா பிரான்சிஸ் சேவியர், (அதிபர்) அருட்செல்வி மேரி விக்ரறின் (இளைப்பாறிய அதிபர் தி. க. மடம் - யாழ்ப்பாணம்). திருமதி சேவியர் ஸ்ரனிஸ்லோஸ் கோமளம், திரு. சு. யோ. பூராசா (அதிபர்), திருமதி கந்தையா புவனேஸ்வரி, திரு. சு. பழனிநாதன், திரு. சு. இலட்சுமணன் ஆகியோரின் அன்புக்குரிய உடன்பிறப்புமாவார். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 20-4-89 வியாழன் காலை 10 மணிக்கு புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின் இறுதியாத்திரை உத்தான பூமியாகிய மனற்காட்டை நோக்கிப் புறப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்க.

தகவல்:
சு. யோ. பூராசா.

புங்குடுதீவு - 2. [10623]

### திரு. துரைசாமி

இளைப்பாறிய Grindlays Bank ஊழியர் துரைசாமி காலமானார்.

இவர் லூர்துநாயகியின் அன்புக் கணவரும், துரைரத்தினத்தின் மைத்துனரும், ராஜேஸ்வரி, அன்ரனிராஜா (U.S.A.), புஸ்பரெட்ணம் (Grindlays Bank), அருட் சகோதரி Bernice (A. C), நீதிராஜா (Australia), தேசராஜா (நெதர்லாந்து), அருட் சகோதரி புவனு (H.F.) ஆகியோரின் அன்புத்தந்தையும், ராஜகுமாரி, Gratia, மாலினி ஆகியோரின் மாமனாரும், Caroline, Angeline, Sanjayan, Arunan, Priyanthon ஆகியோரின் பேரனும் ஆவார்.

மரணச் சடங்குகள் (இன்று) 20-04-1989 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு பத்தாவத்தை இல்லத்தில் நடைபெற்று சேந்தாங்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
புஸ்பரெட்ணம்

[207]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 20 — 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org